1981 ஏப்ரல் 15]

திரு. எம். சின்னசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விசையேற்றங்களை புகளூர் கால்வாயிலிருந்து காவிரி நதிக்கு மாற்றவேண்டும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி மாற்றுகின்ற திட்டத்திற்கான செலவை விவசாயிகளிடமிருந்து வசூலிக்காமல் அந்தச் செலவை அரசே ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளிடமிருந்து அந்தச் செலவு குறித்து ஒரு தொகை வசூலிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

பம்மல் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

* வினா எண். 696— திரு. பம்மல் நல்லதம்பி மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பம்மல் பகுதியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் புகுந்து குடிநீரைக் கெடுத்தல், சுகாதார கேடுகளை விளைவிப்பதைத் தடுக்க பாதாள சாக்கடைத் திட்டத்தின் மூலம் கழிவு நீரை அப்புறப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத் திட்டத்தை ஏற்று உடன் செயல் படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம், (அ) திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் மக்களின் சுகாதாரத்தைக் கெடுப்பதோடு மட்டுமல்லாமல் குடிநீரையும் கெடுக்கின்ற அளவுக்கு இருக்கின்றது. இந்த நிலை பம்மல் பகுதியில் மட்டுமல்ல. பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை போன்ற பகுதிகளிலேயும் இதனால் குடிநீர் கெட்டிருக்கிறது. ஆகவே உடனடியாக இந்தக் கழிவுநீரை வெளியேற்றுவதில் ஒரு புதுத் திட்டத்தை அரசு ஏற்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த மாதிரிப் பிரச்சினைகளுக்கு அரசு இயக்குநர், பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவம், சென்னை-6 அவர்களிடத்தில் தொடர்பு கொண்டு இதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும். அது தான் முறை. அதற்கேற்றபடி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலை களிலிருந்து வெளியேறும் கழிவு நீர் காரணமாக குடிநீரும் கெட்டு விடுகின்ற காரணத்தால் வாணியம்பாடியில் தோல் பதனிடும் உரிமையாளர்கள் பாரத் லெதர் கார்ப்பரேஷன் மூலமாக 40 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டத்தை நிறைவேற்ற அரசிடம் கோரி இருப்பதாகத் தகவல் வந்துள்ளது. அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: துணைத்தலைவரவர்களே, பொதுவாகவே தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீரால் அந்தத் தொழிற்சாலைகளுக்கு கீழ் உள்ள மக்களின் குடிநீரும் பாதிக்கப்படுகின்றது. பயிர்களும் விளையாமல் சாவி ஆகிவிடுகின்றன. ஆகவே ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஒரு செப்டிக் டாங்க் கட்டி கழிவு நீரைத் தேக்கி வைக்கவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தது. மாண்புமிகு திரு. இராஜா முகமது அவர்கள் கூட இந்தச் சபையிலே அது குறித்து பலமுறை குறிப்பிட்டு இருக்கிறார்கள், அந்தத் தொழிற்சாலைகளுக்கு தாக்கீது அனுப்பப்பட்டது என்று. அந்தத் தொழிற்சாலைகள் அவ்வாறு செய்யாவிடில் அவற்றின் லைசன்ஸ் கேன்சல் செய்யப்படும் என்றுகூட தாக்கீது அனுப்பப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அந்தத் தாக்கீது தாக்கீதாகவே போய்விட்டதே தவிர நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே ஒரு குறிப்பிட்ட தேதியை நிர்ணயித்து அந்த தேதிக்குள் எல்லா தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் கழிவு நீரைத் தேக்குவதற்கென்று டாங்க் கட்டவேண்டும் என்றும் அவ்வாறு கட்டாவிட்டால் லைசன்ஸ் ரத்து செய்யப்படும் என்றும் அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களை எல்லாம் உள்ளடக்கிய ஒரு கேள்வியைக் கேட்டால் அதற்குத் தகுந்த பதில் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 15]

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்குக் கூட விவரம் இல்லை என்றால் என்ன அர்த்தம் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தகவல் தன்னிடம் இல்லை என்று சொல்லும்போது என்ன செய்ய முடியும்?

திரு. துரைமுருகன் : இதற்கெல்லாம் பதிலைத் தெரிந்து கொண்டு வரவேண்டாமா ? The Hon. Minister must ccme prepared.

நவமணி தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பாக்கிப் பணம்.

* வினா எண். 697 திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ''நவமணி'' நாளிதழ் நின்றுவிட்டபோதிலும் அதனுடைய தொழிலாளர்களுக்கு இதுவரை சேரவேண்டிய எந்தப் பணமும் கொடுக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) விரைவில் தீர்க்கப்பட அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

(இ) ''நவமணி'' அலுவலகத்தில் இருக்கும் அச்சு இயந்திரங்கள், மற்றப் பொருள்களின் விவரம் இவ்வரசுக்கு தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (அ) மற்றும் (ஆ) ''நவமணி'' நாளிதழை நடத்தி வந்த கூட்டுறவு நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் கலைக்கப்பட்டது. இதற்காக நியமிக்கப்பட்ட கலைப்பு அதிகாரி நிர்வாகத்திற்குச் சொந்தமான சொத்துக்களை வரப்பெற்றும் (தம் வசப்படுத்தி—(Realise the assets) கலைக்கப்பட்ட நிர்வாகம் கொடுக்க வேண்டியவர்களுக்கு முழுமையாகவோ அல்லது விகிதாச்சாரப்படியோ நிலைமைக்குத் தக்கவாறும், தக்க வரிசைப்படியும் சட்டப்படி கொடுக்கும் பொறுப்பை ஏற்றுள்ளார். கலைப்பு அதிகாரியின் நிர்வாகத்தில் தலையிடுவது சட்டப்படி தக்கதன்று.

(இ) தெரியும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நவமணியை தொழில் கூட்டுறவாக ஆக்கி கொடுக்கப்பட்ட கடன் ரூ. 12 இலட்சமும் நவமணியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படவில்லை என்பது உண்மையா ? நவமணியின் ஆசிரியர்கள்